**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 191/2019**

பெயர் : அருள்தாஸ் P.W.2. Cross

த/பெ. : வில்லியம்ஸ்

தேதி : 29.01.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**10 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

1. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் புல எண். 320/5B, 320/5C என்று வாதி கிரயம் பெற்ற கிரய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்கள் தவறானது என்றும், அதன் சரியான புல எண். 320/11 என விளம்புகை செய்யக்கோரியும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 68 செண்ட் ஆகும். தற்போது தாவா சொத்தில் வாதி என்ன பயிர் செய்துள்ளார் என்றால் உளுந்து பயிர் செய்து அறுவடை செய்துள்ளார். மேற்படி சொத்திற்கு ஒரே நான்கெல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை சுற்றி கம்பி வேலி அமைத்து வாதி அனுபவித்து வருகிறார்.

2. தாவா சொத்தை பொறுத்து வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் கிரய ஆவணங்கள் தனித்தனியாக ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தற்போது எங்கு வசித்து வருகிறார் என்றால் திருவிளையாட்டம் கிராமத்தில் வசித்து வருகிறார். காழியப்பநல்லூர் கிராமத்தில் 1ம் பிரதிவாதியின் குடும்பத்தினர் வசித்து வருகிறாரா என்றால் இல்லை. 9ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மாமனார் ஆவார். அவர் தற்போது திருக்கடையூரில் வசித்து வருகிறார். தாவா சொத்திற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 500 மீ தொலைவு இருக்கும்.

3. தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் எப்போதிலிருந்து உள்ளது என்றால் 2012ம் ஆண்டிலிருந்து உள்ளது. தாவா சொத்திற்கு தெற்கில் உள்ள ஒரு வழி நடைபாதையை பொது பாதையாக உபயோகித்து வருகிறோம். அந்த இடம் தாவா சொத்தா என்றால் இல்லை.